Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 325

யாழ்ப்பாணம் மார்கழி 21 ஜனவரி 17 புதன்கிழமை (5 1-72)

விற்பனையாகின்றன
பொங்கல் வாழ்த்து மடல்கள்
கண்ணைக்கவரும் வர்ணவர்ணக் கலர்களில் தயாரிக்கப்பட்ட பொங்கல் வாழ்த்துக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் வியபாரிகளுக்கு விஷேச கழிவு கொடுக்கப்படும். VPP ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். சாம்பிள் செட்டுக்கு 3/- ரூபாய் P. O. அனுப்புக.
தயாரிப்பு & விற்பனையாளர்
தமிழ்ப்பண்ணை புத்தக நிலையம்
193, கே. கே. எஸ். வீதி,
19, பஸ் நிலையம் யாழ்ப்பாணம்
போன்; 7167

# வடக்கில் கடந்த ஆண்டில் குற்றச்செயல்கள் மிக குறைவு

## பொலிஸ் அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த ஆண்டில் வடபகுதியில் குற்றச்செயல்கள் மிகக் குறைவாகவே நடந்துள்ளதென்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் தெரிவிக்கிறார்.

நாட்டின் இதர பகுதிகளுடன் ஒப்பிடுகையில் நடந்து முடிந்த 1971ம் ஆண்டில் வடபகுதியில் குற்றச்செயல்கள் மிகக் குறைவென்றும் குற்றச் சம்பவங்களைப் பொறுத்தவரையில் 1971ம் ஆண்டு வடக்கின் அமைதியான ஆண்டு என்று கூறலாமென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

1971 ஏப்ரல் மாதத்தில் எதிர்பாராதவிதமாக நடந்த சில சம்பவங்களினால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், சுன்னாகம் மின்சார நிலையம், ஆனையிறவுத் தடை வல வெளிப்பகுதி ஆகியவைகள் சிறிது பாதிக்கப்பட்டதைத் தவிர 1971ம் ஆண்டு வடக்கின் அமைதிக்காலம் என்று தமது அறிக்கையில் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கூறுகிறார்.

கடந்த வருடத்தில் ஏனைய முறைகள் குற்றச் செயல்கள் வெகுவும் குறைந்ததற்கு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ஊரடங்கு உத்தரவும் அவசரகாலநிலையும் மிகக் கடுமையாக அமுலிலிருந்ததும் ஒரு காரணமென்றும் திரு. சுந்தரலிங்கம் கருதுகிறார்.

## ஈழத்து தமிழ் சஞ்சிகைகள்

### அமைச்சர் தலைமையில் ஆராயப்படும்

கோட்டை, செவ்வாய்

இலங்கையில் தமிழ் சஞ்சிகைகள் வெளியிடுவது சம்பந்தமாக இம்மாதம் 9-ம் திகதி கலாச்சார அமைச்சர் திரு எஸ் எஸ் குலதிலக்கா தலைமையில் ஆராயப்படவிருக்கிறது.

சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு தபால்மா அதிபர் அலுவலகத்தில் இக்கூட்டம் நடக்கும்.

சிறந்த முறையில் ஈழத்தில் தமிழ் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கும் அரசாங்கம் அதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பது குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

6ம் திகதி ஆரம்பம்

## புங்குடுதீவில் 10 நாள் சைவசமய விழா

குருநகர், செவ்வாய்

பத்துநாள் சைவசமய விழாவொன்று புங்குடுதீவில் நடைபெறவிருக்கிறது.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோவில் மண்டபத்தில் இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் 15-ம் திகதி வரை இவ்விழா நடைபெறுகின்றது.

10 தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீன குருமகாசந்நிதானம் சிலத்திரு ஞானப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகளின் விரிவுரையும், திருப்பனந்தாள் ஆதீன ஓதுவாமூர்த்தி முத்து கந்தசாமி தேசிகரின் பண்ணிசையும் இடம்பெறுகின்றன

## பூட்டோவுக்கு இன்று 44!

ராவல்பிண்டி, ஜன.5

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு இன்று 44-வது பிறந்ததினம். ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் கொண்டாடும் முதலாவது பிறந்ததினத்தை அவர் மிகவும் அமைதியாகக் கொண்டாடுகிறார்.

## 14பேர் பலி

திருவனந்தபுரம், ஜன.4

கேரளத்தில் இன்று நடந்த கோர பஸ் விபத்தில் 14பேர் மாண்டனர் 37 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

கோட்டயத்துக்கு சமீபத்திலுள்ள காஞ்சிரப்பள்ளி என்ற இடத்தில் இந்த விபத்து நடந்தது. 60பேரை ஏற்றிக்கொண்டு சென்ற இந்த தனியார்துறை பஸ் திருப்பமொன்றில் எதிர்பாராத விதமாக ஆற்றுக்குள் பாய்ந்தது. ஸ்தலத்திலேயே 9 பேர் மாண்டனர். 5பேர் ஆஸ்பத்திரியில் இறந்தனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 37பேரில் சிலரது நிலைமை மோசமாக இருக்கிறது.

## யுதாண்டுக்கு சமாதானப்பரிசு

நியுயோர்க், ஜன. 4

ஐ. நா.வின் முன்னாள் தலைமைச் செயலாளர் யுதாண்டுக்கு ஐ நாவின் சமாதானத்துக்கான தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டுகள் இந்தப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அவருக்கு அப்பதவிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் கேர்ட் வால்தீம் இந்தப்பதக்கத்தை வழங்கினார் பர்மியரான யுதாண்டைவிட டாக்டர் வால்தீம் 10வயது இளையவர்.

யாழ். நகரில் இன்று முதல் புதிய வரி
மோட்டார் வாகனங்களை நீண்டநேரம் வீதியில் நிறுத்தி வைக்காதீர்கள்
விபரம்:
(3-ம் பக்கம் பார்க்க)

## 'நாடு முழுவதுக்கும் ஒரே பல்கலைக்கழகம்'

### ஆட்சிமன்றததில் கல்வி மந்திரி

கொழும்பு, செவ்வாய்

''நாடு முழுவதுக்கும் ஒரே பல்கலைக்கழகம் இருக்க வேண்டுமென்பதையே இந்தச் சட்ட மூலம் வற்புறுத்துகிறது.''

இன்று ஆட்சிமன்றத்தில் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு எடுத்துக் கொண்டபோது கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் மேற்கண்டவாறு கூறினார்.

பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்படும் நிதியைச் சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும் என்று கூறிய கல்விமந்திரி, சென்ற காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதி சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சட்டத்தின் மூலம் இலங்கை முழுவதுக்கும் ஒரே பல்கலைக்கழகம் இருக்கும் என்றும் பேராதனை, கட்டுப்பெத்தை, களனி, ஹிஸ்குராகொடை ஆகியன இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு படிப்புத் துறைக்கான பிரிவுகளாக இருக்குமென்றும் டாக்டர் மஹ்மூத் கூறினார்.

இலங்கை கட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடு என்பதை வலியுறுத்திய மந்திரி, ஒதுக்கப்படும் நிதிகளை உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்

### அரசாங்கக் கட்சிக் கூட்டம்

இன்று காலை அரசாங்கக் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் பிரதமர் திருமதி சிறிமாவோ தலைமையில் நடைபெற்றது. கல்வி மந்திரி உறுப்பினர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகச் சட்ட மூலம் உயர்தரக் கல்விக்கான கடன் வசதி ஆகியவற்றை விளக்கினார்.

விவசாயிகளுக்கு மீண்டும் துப்பாக்கிகளைக் கொடுப்பது என்ற பிரச்னை எடுக்கப்பட்டபோது நாட்டின் பாதுகாப்புக்கு இதன் மூலம் தீங்கு ஏற்படலாமெனச் சுட்டிக்காட்டப்பட்டது.

## 'ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடியவர்'

### றெபர்ட்டின் மறைவுக்கு அஞ்சலி

கொழும்பு, செவ்வாய்

காலஞ்சென்ற றெபர்ட் குணவர்த்தன அவர்கள் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கடுமையாகப் போராடியவர். அவர் பிரிவு நாட்டுக்குப் பெரும் இழப்பு என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா ஆட்சிமன்றத்தில் இன்று கூறினார்.

திரு றெபர்ட் குணவர்த்தனாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையைக் கொண்டுவந்து பேசுகையில் ஆட்சிமன்றத்தில் 18 வருடகாலம் அங்கத்தவராக இருந்து நாட்டுக்குச் சேவையாற்றியவர் என்றும் அவரின் சுதந்திர வேட்கை அபாரம் சிறைக்குள் அடைத்திருக்கிறதென்றும் கூறினார்.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா திரு றெபர்ட்டின் மறைவுக்கு நினைவு அஞ்சலி செலுத்திப் பேசினார் எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் உரையாற்றினார்.

## பதவி உயர்வு பிரச்னை

கொழும்பு, செவ்வாய்

சேவைக்கால அனுபவ முதிர்ச்சி பதவி உயர்வு நியமனங்களில் முதலிடம்பெறப்பட வேண்டுமா என்ற ஒருகேள்வி இப்போது அரசாங்கத் தொடர்பு நிலைகளில் ஒரு பிரச்னையாக எழுந்துள்ளது.

சென்ற இருபது மாதங்

(5-ம் பக்கம் பார்க்க

REGAL (Jaffna)
Daily 5-00, 7-15 p. m.
Sat. Sundays 10-30
Fredrick Stafford
in
MISSION FOR
A KILLER
(color film)

தினசரி 2-00, 10-00
சிவாஜி — சாவித்திரி
நடித்த
வடிவுக்கு வளைகாப்பு

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு காலை 10-30
THE THOMAS
CROWN AFFAIRS

6-00, 10-00 சனி,
ஞாயிறு 2-30.
இருமலர்கள்
(புதிய கொப்பி)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை

7-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்
நடித்த
என் அண்ணன்





லிடோ (யாழ்ப்பாணம்)
லிடோ (கொழும்பு)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
★ சம்மிகபூர் ★ சர்மிலாதாகூர்
★ பிரான் ராஜேந்திரநாத்
★ கே. என். சிங்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
அன் ஈவினிங் இன் பாரிஸ்
(ஈஸ்ட்மன் கலர்)


## வரி விளம்பரம்


மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3845

### விற்பனைக்கு

ராதா மின்சார மருந்து தலைவலி, ஜலதோஷம், வாய்வுப் பிடிப்புகள், நோவுகள், கழுத்து வாதம் மற்றும் அநேக நோய்களுக்கு உபயோகமான சிறந்த மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3846

நல்ல பழக்கவழக்கமுள்ள உயர்தர அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. இனவிருத்திக்காகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3811

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
நிறைகுடம்

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி, ஞாயிறு பி.ப. 2-30
சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும்வரை

2-வது வாரம்
வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-காஞ்சனா
நடித்த
சிவந்தமண்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி
(சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30 மெற்னி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
பிராப்தம்

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
See the hot Spots
of the World
The Sexiest Women
from East to West
in
SEXY
(Colour)
(A Certificate)

### தேவை

நல்ல அனுபவமுள்ள காஷியர், சமையலாளி (கவிற் போடத்தெரிந்தவராக இருக்கவேண்டும்), டீ மேக்கர், தின்வகைகள் பரிமாறுபவர். 10-ம் திகதிக்கு முன் நேரில் வரவும். T P வாசுதேவன், 97/2, மானிப்பாய் றோட், வண்ணார் பண்ணை. 3849

அப்பள வேலையில் அனுபவம் உள்ளவர்கள் உடனே தேவை. நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம். சகல வசதிகளும் உண்டு. விலாசம்:- அம்பாள் இண்டஸ்றீஸ், சிவபுர வீதி, வல்வெட்டித்துறை 3851

### வைத்தியம்

வாதம், கிரந்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம். (D A.M.) தங்க மாளிகை வைத்தியசாலை, இராச வீதி, நல்லூர் மார்க்கெட்' யாழ்ப்பாணம். 3817


'பொதுப்பணியில்

## பெண்கள் பங்கு கொள்ளவேண்டும்'

பருத்தித்துறை, செவ்.

"ஊருக்கொரு கோவில் இருப்பது எத்தனை அவசியமோ, கிராமத்துக்கொரு மகளிர் பாடசாலையும் அவசியம். பெண்கள் இதுவரை சமுதாய வாழ்விலிருந்து ஒதுங்கியிருந்த நிலைமை ஒழிக்கப்பட்டு, ஆண்களுடன் சரிநிகர் சமானமாகப் பொதுப்பணிகளில் தீவிர பங்குகொள்ளவேண்டும்"

இவ்வாறு வல்வை மகளிர் மகாவித்தியாலயத் திறப்பு விழாவுக்குத் தலைமைதாங்கி உரைநிகழ்த்திய பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் கூறினார்.

பருத்தித்துறைக் கல்விப் பகுதி அதிகாரி திரு. கே நடராஜதினம் குத்துவிளக்கேற்றிச் சம்பிரதாய முறைப்படி பாடசாலையைத் திறந்துவைத்தார்.

வல்வை நகரசபைத் தலைவர் திரு. அ. நடராத்தினம் காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து வித்தியாலய அதிபர் திருமதி ஜி அரியரத்தினம் ஆகியோரும் பேசினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ......

## மட்டக்களப்பு ரயில் சேவை

கொழும்பு, செவ்.

பொலநறுவை - ஹிங்குரகொட ரயில் பாலத்தில் ரயில் ஒன்று தடம்புரண்டதால், மட்டக்களப்பிற்கான ரயில் சேவைகள் நேரடியாக நடைபெறமாட்டா தென அறிவிக்கப்படுகிறது.

பொலநறுவையிலிருந்து ஹிங்குரகொடவரை பிரயாணிகள் பஸ்ஸில் செல்லத்தக்கதான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மறு அறிவித்தல்வரை இந்தப் பகுதியில் இந்த முறையில் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.


## சுங்க ஏலவிற்பனை

கீழே குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் கீழே இருக்கும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும் இடங்களிலும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1954 வைகாசி மாதம் 28-ம் திகதி அரசாங்க வர்த்தமானியில் (பகுதி I பிரிவு II ல்) கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுடன் கீழ்க்காணும் நிபந்தனைகளும் புடவைகள் விற்பனை விடயத்தில் அனுமதிக்கப்படும். (நல 10675).

1 ஒரு தனிப்பட்ட நபர் இரு புடவைகள் மாத்திரம் வாங்கமுடியும். இந்நிபந்தனை அவசியம் ஏற்பட்டால் தளர்த்தப்படும்

2. பொருட்களை வாங்குவோர் சுங்க அதிகாரியின் திருப்தித்தகைமைய தங்களை அடையாளம் செய்ய வேண்டும். பின்வரும் பத்திரங்கள் அடையாளம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) வாகனமோட்டும் அனுமதிப்பத்திரம் அல்லது
(ii) பிரதம தபால் அதிகாரியால் வழங்கப்பட்ட அட்டை அல்லது
(iii) மாணவ அடையாளப்பத்திரம் அல்லது
(iv) பிறநாடுகளுக்குச் செல்லும் அடையாளப் பத்திரம் அல்லது வேறு ஏதாவது அடையாளப் பத்திரம்
(v) முழுப்பணமும் வாங்கினவுடன் கட்டவேண்டும்.

### பட்டியல்

**பொருட்கள்**
சட்டைத்துணிகள், சாரங்கள், கைக்குட்டைகள், பருத்திச் சேலைகள், பட்டுச்சேலைகள், பருத்தி வேட்டிகள், செயற்கைப்பட்டுச் சாரங்கள் (லொத்தர் சபையினரால் நிராகரிக்கப்பட்டவை)

**விற்பனைத்தினம்**
1972-ம் ஆண்டு தை மாதம் 10-ம், 11-ம் திகதிகள்.

**விற்பனைசெய்யும் இடம்**
யாழ்ப்பாண சுங்க இலாகா

**விற்பனை நேரம்**
காலை 9-30 மணி தொடக்கம் பின்னேரம் 3 மணி மட்டும்.

எஸ். எம். ஜே. சேனரத்ன
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக

சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்,
3-1-1972. 3350

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
(இருவேடங்களில்)
- அசோகன்
மனோகர் - சோ - தேங்காய் சீனிவாசன்
மனோரமா
நடித்த
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)





# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

1. ரூபா 1000/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 125/- வட்டி கொடுக்கப்படும்.
2. ரூபா 500/- ஜூபிலி சேமிப்பிற்கு (Jubilee Deposit)
வருடம் ரூபா 63/- வட்டி கொடுக்கப்படும்.

குறிப்பு:-
இந்த ஜூபிலி சேமிப்பில் ஒருவரிடமிருந்து ரூபா 1000/- அல்லது ரூபா 500/- வாங்கப்படும்.

மறுவிபரங்களுக்கு:
தம்பி அன் கோ.
வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

# ஷேக்கை அழைத்துவர செஞ்சிலுவை விமானம் புறப்பட்டது

## விடுதலையாகும் திகதி பற்றி இன்னும் சரியான தகவல் இல்லை

புதுடில்லி, ஜன. 4

**ஷேக் முஜிபுர் ரஹ்மான் எப்பொழுது விடுதலை செய்யப்படுவார் என்பது பற்றி இன்னும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.**

இதேசமயம் ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலையானவுடன் அவரை பங்களாதேஷிற்கு ஏற்றிச் செல்வதற்காக டாக்காவிலிருந்து செஞ்சிலுவைச்சங்க விமானமொன்று ராவல்பிண்டிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஷேக் விடுவிக்கப்பட விருக்கிறார் என்ற செய்தி கிடைத்தவுடன் டாக்காவிலும் இதர நகரங்களிலும் மக்கள் ஆரவாரம் செய்து பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

ஷேக் முஜிபுர் ரஹ்மானை நிபந்தனையின்றி விடுதலை செய்யப்போவதாக பாகிஸ்தான் அதிபர் சுல்பிகார் அலிபூட்டோ நேற்று கராச்சியில் பொதுக்கூட்டமொன்றில் அறிவித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் ஏகோபித்த சம்மதம் தெரிவித்த தையடுத்தே ஜனாதிபதி பூட்டோ இதை அறிவித்தார் என்று பாகிஸ்தான் வானொலி கூறியது.

### உலக அபிப்பிராயத்துக்கு பூட்டோ மதிப்பு

உலக அபிப்பிராயத்திற்கு மதிப்பளித்து ஷேக் முஜிபுர் ரஹ்மானைத் தாம் விடுதலை செய்வதாக ஜனாதிபதி பூட்டோ தெரிவித்தார். அதற்கு முன்னதாக அவருடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக அவர் கூறினார்.

எட்டு நாட்களுக்குமுன்பு ஷேக் முஜிபுர் ரஹ்மானைத் தாம் சந்தித்த போது, "நான் இப்பொழுது ஒரு சுதந்திர மனிதனா" என்று ஷேக் தம்மிடம் கேட்டதாக பூட்டோ தெரிவித்தார். இதற்கு நேரடியாக பூட்டோ பதிலளிக்கவில்லையாம்.

கராச்சியிலிருந்து ராவல்பிண்டிக்குத் திரும்பியதும் ஷேக்குடன் பேசப்போவதாக அவர் கூறினார்.

#### விமானம் புறப்பட்டது

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்பட விருக்கிறார் என்ற செய்தி கேட்டவுடன் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவிலிருந்து செஞ்சிலுவைச் சங்க விமானம் ஒன்று அவரை ஏற்றி வருவதற்காக ராவல்பிண்டிக்குப் புறப்பட்டுச் சென்றது என செய்திகள் கூறின.

ஷேக் விடுதலையானதும் பாகிஸ்தானைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுவாரா இல்லையா என்பதுபற்றி தகவல் இல்லை. மேலும் அரசாங்க காரியங்கள் தவிர வேறு காரணங்களுக்காக பாகிஸ்தானிலிருந்து எவரும் வெளிநாடு செல்வதை பூட்டோ தடைசெய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. ஷேக் பங்களாதேஷிற்குப் போக அனுமதி வழங்கப்படுமாயின அவருக்கு பூட்டோ விசேஷ சலுகையளிக்க வேண்டியிருக்கும். அத்துடன் ஷேக் பங்களாதேஷிற்குப் புறப்படுவதற்கு உடனடியாக விமான வசதியும் தேவைப்படும். இதற்காகவே செஞ்சிலுவைச் சங்க விமானம் ராவல்பிண்டிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

### புதுடில்லி வரவும் தயார்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பிரச்னைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்த தாம் தயாராய் இருப்பதாக ஜனாதிபதி பூட்டோ கூறினார். அவசியமானால் புதுடில்லிக்குச் சென்று பேச்சுக்களில் கலந்து கொள்ளவும் தாம் தயாராய் இருப்பதாக ஜனாதிபதி பூட்டோ சொன்னார். இந்தியாவும் உலக அபிப்பிராயத்துக்கு மதிப்பளித்து தான் ஆக்கிரமித்துள்ள இடங்களிலிருந்து வெளியேறும் என்று எதிர்பார்ப்பதாக பூட்டோ கூறினார்.

---

### ஸ்ரீ தியாக ப்ரம்ம மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

ஜனவரி 16 முதல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீ தியாகப்பிரம்ம உற்சவம் நடைபெற இருக்கின்றது. இதை நடத்துவதற்கு மூவர் கொண்டகுழுவை ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் நியமித்துள்ளனர்.

## இராணுவக் கொடுமைக்கு ஆளான 30 லட்சம் பேர்

பங்களாதேஷில் பாகிஸ்தான்ராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள் காணாமற்போனவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்துக்கு மேலிருக்கும் என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான "பிராவ்டா"வுக்கு அதன் டாக்கா நிருபர் அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

பங்களாதேஷில் பாகிஸ்தான் படைகள் சரணடைவதற்கு முன்னதாக உள்ளூர் அறிஞர்கள் உட்பட 800 பேர் வரை இவர்களில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கொலைசெய்வதற்கென 90 பக்கங்கள் கொண்ட பட்டியல் ஒன்றை அவர்கள் தயாரித்திருந்தனர் என்றும் அந்நிருபர் தெரிவித்துள்ளார்.

**இந்திய பொறிஞர் சாதனை**

இந்திய பாகிஸ்தான் போரின்போது இந்திய பொறிஞர்கள் ஆற்றியுள்ள பணிகள் பற்றி இப்பொழுது செய்தி வெளியாகியுள்ளது. பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசித் தாக்கிவிட்டு சென்ற மறுகணமே இவர்கள் தம் சீரமைப்புப்பணிகளை ஆரம்பித்துவிடுவார்கள். விமான ஓடுபாதைகள் பாதிக்கப்பட்டால் சில மணிநேரத்திற்குள் அதனைச் சீரமைத்து ராணுவ விமானங்கள் பறந்து செல்லவழி செய்துவிடுவார்களாம். இரவு பகலாக இவர்கள் கடமையாற்றி ராணுவத்தினர் திறம்பட செயல்பட உதவியுள்ளனர்.

இது போன்றே ராணுவ சாதனஉற்பத்திலும் பெருமளவில் அதிகரித்துள்ளன. ராணுவ சாதன உற்பத்தி வழியர்கள் இரவு பகலாக கடமையாற்றி இந்தியராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்தனராம்.

## பக்கிங்ஹாம் மாளிகைக்கு கூர்க்கா படை காவல்

லண்டன், ஜன 4

நந்தார்தினத்தன்று கூர்க்காப் படைவீரர்கள், பக்கிங்ஹாம் மாளிகையை காவல் காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை லண்டன் நகர மக்கள் மிக ஆர்வத்துடன் பார்த்து நின்றனர். பிரிட்டனுக்கு தற்போது விஜயம் செய்திருக்கும் அரசநேபாள இராணுவப் படையின் முன்னாள் பிரதம தளபதி ஜெனரல் கிரேந்திர பஹதூர்ஷா, கூர்க்காப் படையின் காவல் பொறுப்பேற்கும் சம்பிரதாயச் சடங்கிற்கு வருகைதந்திருந்தார்.

கூர்க்காப் படையினர் காக்கிநிற உடையும் தம் பிரபல கூர்க்கா தொப்பியையும் அணிந்திருந்தனர். மிகவும் கம்பீரமாக உடை அணிந்து விருநடைபோட்ட இவ் வீரர்களைக் கண்டு லண்டன் மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

பக்கிங்ஹாம் மாளிகையை விட கூர்க்காப் படையினர் லண்டன் கோபுரம் செயிண்ட் ஜேம்ஸ் மாளிகை, விண்ட்சர் மாளிகை ஆகிய இடங்களையும் காக்கும் பொறுப்பை ஏற்றிருக்கின்றனர். இவ்வருடம் மார்ச் மாதம்வரை இவர்கள் இக்காவல் கடமையைச் செய்வார்கள்.

பக்கிங்ஹாம் மாளிகையைக் காவல் காக்கும் பொறுப்பு கூர்க்கா வீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

---

### மாட்டுடன் மோதிய கார்

சங்கானை, செவ்

சங்கானையிலிருந்து சித்தன்கேணியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மாட்டுவண்டியுடன் எதிர்த்திசையாக வந்த மோட்டார் கார் ஒன்று மோதிய தில் மாடொன்று இறந்தது வண்டியும் பலத்த சேதம் அடைந்தது. சங்கானைப் பொலிசார் விசாரணை நடத்தி வண்டிச் சொந்தக்காரருக்கு நஷ்டஈடாக நாநூறு ரூபா காரின் சொந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

## பங்களாதேஷ் மக்கள் குதூகலம்

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலையாகப்போகிறார் என்ற செய்தி கிடைத்தவுடனேயே டாக்காவிலும் மற்ற பங்களாதேஷ் நகரங்களிலும் மக்கள் ஆரவாரம் செய்தும் வேடிக்கை கொளுத்தியும் மகிழ்ந்தார்கள்.

"ஜெய் பங்களாதேஷ்", ஜெய் முஜிபுர், ஜெய் இந்திராகாந்தி என்றெல்லாம் மக்கள் கோஷமிட்டார்கள்.

பாகிஸ்தான் இராணுவம் பங்களாதேஷிற்குள் புகுந்து அட்டூழியங்கள் புரிய ஆரம்பிப்பதற்கு முன்னரும் இப்படியான ஆரவாரங்கள் கேட்டனவென்றும் ஆனால் இப்போது கேட்கும் ஆரவாரங்கள் வித்தியாசமாகவிருக்கின்றன என்றும் வேகம்முஜிபுர் ரஹ்மான் நிருபர்களிடம் கூறினார்.

ஷேக் விடுதலையாவதுபற்றி பங்களாதேஷ் பிரதம மந்திரி திரு தாஜுதீன் அகமது கருத்துத் தெரிவிக்கையில் பாகிஸ்தான் பதேச்சாதிகாரம் உலகஜனநாயக கருத்துக்கு கடைசியில் அடிபணிந்துவிட்டது என்று கூறினார்.

### 3 கோடி அகதிகளுக்கு புனர்வாழ்வு வசதி

பங்களாதேஷில் சுமார் 3 கோடி அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க உலகநாடுகள் உதவிசெய்யவேண்டும் என பங்களாதேஷ் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தான் இராணுவத்தின் அட்டூழியங்களின் போது வீடுவாசல்களை இழந்து சிதறிபோன குடும்பங்களுக்கும் இந்தியாவிலிருந்து திரும்பிவரும் அகதிகளுக்கும் புனர்வாழ்வளிப்பதற்கு இந்த உதவிகளை அவர் கோரியுள்ளார்.

இந்தியா, சோஷலிஸ்ட் நாடுகள், மற்றும் நட்புநாடுகள் ஏற்கனவே இந்த வகையில் பங்களாதேஷிற்கு உதவியளிக்க முன்வந்துள்ளன. இந்த மறுவாழ்வுப் பணியில் 6 லட்சம் தொண்டர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பிரதமர் கூறினார். இந்தியாவிலிருந்து ஏற்கனவே 5 லட்சம் அகதிகள் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள் என்று தெரிகிறது.

யாழ்ப்பாண நகரில்

## இந்த வீதிகளில் அதிக நேரம் நிறுத்தும் வாகனங்களுக்கு வரி!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணநகரில் பொதுஜன போக்குவரத்து, வாகனப் போக்குவரத்து அதிகமான வீதிகளில் அதிக நேரம் மோட்டார்வாகனங்களை நிறுத்திவைத்திருக்கும் மோட்டார்வாகனச் சொந்தக்காரரிடமிருந்து வரி அறவிடும் திட்டமொன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை இம்மாதம் 5-ம் திகதி முதல் அமுலுக்குக்கொண்டுவருகிறது.

விதிப்போக்குவரத்து நெருக்கடியை ஓரளவு தீர்க்குமுகமாக இவ்விதநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேயர் திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார். நகரின் சில முக்கிய வீதிகளில் இத் திட்டம் செயற்படுத்தப்படும்.

ஆஸ்பத்திரி வீதியில் முனியப்பர் கோயில் சந்தியிலிருந்து சிவன்பண்ணை வீதிச் சந்திவரையும் கஸ்தூரியார் வீதியில் வைத்தியசாலை வீதிச் சந்தியிலிருந்து ஐந்து வீதிச் சந்திவரையும், கஸ்தூரியார்வீதியில் பெரியகடையிலிருந்து ஸ்ரான்லி வீதிச்சந்திவரையும் மின்சாரநிலைய வீதி, காங்கேசன்துறை வீதியில் நீதிமன்றமாளிகையிலிருந்து நாவலர் வீதிச் சந்திவரையும் நிறுத்தப்படும். மோட்டார்கார்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமாக ஒரு மணித்தியாலத்துக்கு 10 சதம் அறவிடப்படும். லொறிகளும் வான்களும் மாட்டுவண்டிகளும் ஒரு மணித்தியாலத்துக்கு 25சதவீதம் செலுத்தவேண்டும்.

மணித்தியாலக்கணக்கில் மோட்டார் வாகனங்களை மேற்படி வீதிகளில் நிறுத்திவைத்திருப்பதனால், போக்குவரத்துக் கஷ்டங்களும் விபத்துக்களும் ஏற்படக் காரணமாகின்றது என்றும் இத் திட்டத்தின் மூலம் இக் கஷ்டங்கள் நீங்கும் என்றும் யாழ் மாநகரசபை எதிர்பார்ப்பதாக திரு துரையப்பா கூறினார்.

இதுதவிர போக்குவரத்து அதிகமான வீதிகளில் உள்ள நடைபாதைகளுக்கு மேல் நீட்டி கட்டிய நடைபாதைகள் திருத்தம் செய்யப்பட்டுவருவதாகவும் இதுவரை சேறும் சகதியுமாயிருந்த பல பிரதான நடைபாதைகள் சீமெந்து தகடுகள் பதிப்பதினால் திருத்தி வருவதாகவும் பாதசாரிகள் வீதிகளில் செல்லாமல் நடைபாதைகளை உபயோகிக்குமாறும் யாழ் மேயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஒரு நிரு)

**அரசியலமைப்புச் சபையிலே** — நாது நிருபர் பெரி சுந்தரலிங்கம்

# ஏகநாயகனாக நின்று திருத்தங்கள் பல கொண்டு வந்த தகநாயகா

'தனிமரம் தோப்பாகாது' என்ற தமிழ்ப்பழமொழியை முன்னாள் முதலமைச்சர் காலிப் பிரதிநிதி தகநாயகா அறிந்திருப்பாரோ என்னவோ. ஏகநாயகனாக நின்று எதையும் எதிர்த்துப் போராடுவதில் ஈழத்தின் அரசியல் சரித்திரத்தில் தனக்கெனத் தனியிடம் பெற்றுக்கொண்டார் என்றால் மிகையாகாது.

அரசியலமைப்புச் சபை இன்று காலை மீண்டும் கூடிய போது அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினால் டிசம்பர் 29ம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நகல் அரசியலமைப்பு ஏற்கெனவே அரசியலமைப்புச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கு அமைய வரையப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற விவாதம் ஏற்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் தகநாயகாவும், முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும் இன்றைய எதிர்க்கட்சி உறுப்பினருமான திரு பிரின்ஸ் குணசேகரா ஆகிய இருவரைத் தவிர, சபையில் வீற்றிருந்த ஒரே தமிழ்ப் பிரதிநிதி திரு வி. எக்ஸ் மார்ட்டின் உட்பட அனைவரும், இந்நகல் அரசியலமைப்பு, ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கு ஏற்ப வரையப்பட்டிருக்கிறது என்ற கொள்கையை ஏகமனதாகக் கொண்டிருந்தனர்.

'போற்றுபவர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று தனியே தன்வழி செல்லும் தகநாயகாவோ ஆரம்பத்திலேயே 'என்னிடம் 23 திருத்தப் பிரேரணைகள் இருக்கின்றன' என்று ஒரு போடு போட்டு பிரச்னையைக் கிளப்பிவிட்டார்.

'ஸ்ரீலங்காக் குடியரசு [illegible] செயல்படவேண்டும்' என்று ஒரு திருத்தப் பிரேரணை.

நிலையக் கட்டளைகளின்படி, இந்தத் தருணத்தில் இப்படித் திருத்தப் பிரேரணை கொண்டுவர முடியாது என்று சக டாக்டருக்குப் பரிந்து, ஒரு முட்டுக்கட்டை போட்டார் டாக்டர் என். எம்.

அவைத் தலைவர் திரு ஸ்டான்லி திலகரத்ன திருத்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று அறிவிக்கவே 'விட்டேனா பார்' என்று அடுத்த திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார் தகநாயகா.

'குடியரசு ஜனாதிபதியின் சம்பளம் அவரது பதவிக் காலத்தில் எவ்வகையிலும் அவருக்குப் பாதகமானமுறையில் மாற்றப்படக்கூடாது என்ற அரசியலமைப்பு விதியை மாற்றவேண்டும்; எல்லா அதிகாரமும் கொண்டு இறைமையுள்ள சபையான தேசிய சபைக்கு, குடியரசு ஜனாதிபதியின் சம்பளத்தைக் குறைக்கும் அதிகாரம் இல்லாத சபையை, எல்லா அதிகாரமும் கொண்ட இறைமையுள்ள சபையென்று எப்படிக் கூறமுடியும்?' என்று முழு மூச்சாக வாதிட்டார் டாக்டர் தகநாயகா!

'அடிப்படைத் தீர்மானங்களால் வரையறுக்கப்பட்ட பரந்த எல்லைக்குள் நின்று, இந்நகல் அரசமைப்பு வரையப்பட்டிருக்கிறதா இல்லையா என்றுதான் பார்க்க வேண்டுமேயொழிய, குறுகிய எல்லைக்குள் நின்று கொண்டு, ஒவ்வொரு வாசகமாகப் பார்க்க இதுவல்ல சந்தர்ப்பம்; இதனைக் குழு நிலையில் ஆராயும்போது செய்யவேண்டும்' என்று சொல்லி, டாக்டர் தகாவின் வாதத்தை முறியடித்தார் டாக்டர் கொல்வின்!

திருத்தப் பிரேரணையை வாக்கெடுப்புக்குவிடவேண்டுமென்று தகா கோரியபோது, குதிரை குப்புறத் தள்ளி குழியும் பறித்த கதையாக அதனை யாரும் ஆமோதிக்கவில்லையே என்ற தடையைப் போட்டார் டாக்டர் கொல்வின்.

'ஆமோதிப்பார் யாருமில்லையா?' என்ற ஏக்கப் பார்வையுடன் தகா திரும்பிப் பார்த்தபோது 'ஏன் இல்லை? நானிருக்கிறேன். அஞ்சற்க' என்று எழும்பினார் திரு பிரின்ஸ் குணசேகரா.

வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஆதரவாக 2 வாக்குகளும், எதிராக 80 வாக்குகளும் கிடைத்தன.

தோல்வியைக் கண்டு துவண்டுவிடக்கூடியவர் அல்லவே தகா. அடுத்த திருத்தப்பிரேரணையைக் கொண்டு வர அவர் முயற்சித்தபோது, இந்நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சர் டாக்டர் கொல்வின் கோபம் கொப்பளிக்க எழுந்துநின்று, 'இதுவரை நான் வெகு கஷ்டத்துடன் அடக்கிவைத்திருந்த ஓர் 'உண்மை'யை பகிரங்கமாகச் சொல்லத்தான் வேண்டும்' என்று உச்சஸ்தாயியில் ஆரம்பித்து, 'அவசரகாலச்சட்டம் இருக்குமட்டும் அரசியலமைப்புச் சபை கூடக்கூடாது என்று அன்று வாதிட்டவர் இன்று வேறு வழிகளில், கூட்டநடவடிக்கைகளுக்குத் தடை போடப் பார்க்கிறார்; இந்த நாட்டின் பிரதமராக இருந்தவர் இப்படி நடந்துகொள்வது அழகல்ல; முறையல்ல' என்று முழங்கினார்.

தகா ஒருவாறு ஓய்ந்துவிட, பிரின்ஸ் தொடர்ந்தார். பழைய குப்பையைக் கிளறி, உத்தியோகமொழி சம்பந்தப்பட்ட விதிகள், குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும், நீதிமன்றங்களிலும், பிற அமைப்புகளிலும் தமிழில் வேலைசெய்ய வழிகோலும் விதிகள் உத்தியோகமொழிச் சட்டத்திற்கும், நீதிமன்ற மொழிச்சட்டத்துக்கும் முரணானதென வாதிட ஆரம்பித்தார்.

"நீதிமன்ற மொழிச்சட்டத்தைக் கொலை செய்துவிட்டே, இந்நகல் அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது" என்று குற்றம் சாட்டினார்.

வடக்கிலும், கிழக்கிலும் நீதிமன்றங்களில் தமிழில் கடமையாற்ற அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, செல்வநாயகத்துக்கும், டட்லி சேனநாயகாவுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இரகசிய ஒப்பந்தத்தில் இருந்த ஒரு ஷரத்து இன்று அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் ஆதரவுடன் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பிடித்துவிட்டதே! என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

1961-ம் ஆண்டு நீதிமன்றங்களில் சிங்களத்தை மட்டும் உத்தியோகமொழியாக்கும் சட்டத்தை, முழுமூச்சாக எதிர்த்து தமிழுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று வாதிட்டவர்கள், டாக்டர் கொல்வினும் அவரது சகாக்களான சமசமாஜக்கட்சிக்காரர்களும் என்று குற்றிக்காட்டிய பிரின்ஸ் குணசேகரா, அவர்களது அன்றைய கொள்கையை இன்று அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்றிவிட்டனர் என்று கூறி 'செல்வநாயகம் - டட்லி இரகசிய ஒப்பந்தம்போல், இவர்களும் ஏதாவது இரகசிய ஒப்பந்தம் செய்திருக்கிறார்களோ நானறியேன்' என்று போகிறபோக்கில் ஒரு போடுபோட்டார்.

"உண்டா இல்லையா" என்று சொல்லத்தான் தமிழரசுக்கட்சி எம். பி.க்களோ, தமிழ்க்காங்கிரஸ் எம். பிக்களோ ஒருவரும் சபையில் இல்லையே!

எல்லாத் திருத்தப்பிரேரணைகளும், இவ்வாறு பிரேரிக்கப்பட்டு, பின்னர் தோற்கடிக்கப்பட்டவுடன் 'நகல் அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானத்திற்கு ஏற்ப வரையப்பட்டிருக்கிறது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், 6-ம் திகதி வரை சபை ஒத்திவைக்கப்பட்டது.

## யாழ். இந்துவில் பயிற்சி

பருத்தித்துறை, செவ்வாய்

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 250 ஆசிரியருக்கான விஞ்ஞான, கணித பாடங்களுக்கான பயிற்சி முடிவடைந்து மேலதிக 875 பேருக்கான பயிற்சி 6-ம், 7-ம், 8-ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. இவர்களுக்கான பயிற்சியில் செய்முறைக்கே முக்கியத்துவமளிக்கப்படுகின்றது. வடமாநில விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதனும் முதன்மையாசிரியரும் இப்பயிற்சிக்கும் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றனர்.

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், புதன்

வடமாநில கல்வி அலுவலக நிதிக்கிளையின் பிரதான எழுதுவினைஞர் திரு. செ. துரைசிங்கம் இம்மாதம் தொடக்கம் நிதிஉதவியாளராக பதவிஉயர்வுபெற்று கல்முனை கல்வி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் வடமாநில கல்வி அலுவலக விளையாட்டுச் சங்கத்தின் பொருளாளரும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளையின் உபதலைவரும், அரியாலை கிழக்கு சனசமூக நிலையத்தின் உபதலைவருமாவார்.

டெற்றோல் கிருமிகளைக் கொன்று உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிறது



ஆபத்தான கிருமிகள், உங்கள் சுற்றுப் புறங்களில் சூழ்ந்திருக்கின்றன. இந்தக் கிருமிகள், உங்கள் உடம்பில் பல வழிகளிலும் நுழைந்து, நோயும், நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும். அக் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற டெற்றோல் பாவியுங்கள்.



வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள், பூச்சிக் கடிகளுக்கு டெற்றோல் பாவியுங்கள். அது கிருமிகளைக் கொன்று சீழ் பிடிப்பதைத் தடுக்கிறது. பிளாஸ்திரி மட்டுமே இடுவதால் ஆபத்தான கிருமிகள் உள்ளே அடைபட்டுச் சீழ்ப்பிடிப்பை உண்டாக்குவன.



டெற்றோலை, குளிக்கும் தண்ணீரிற் சேருங்கள். குளியற் தொட்டியிற் சேர்த்த டெற்றோல், உங்கள் குடும்பத்தை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.



டெற்றோல், மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கு அதி உகந்தது.




டெற்றோல், தேகத்துக்கேற்ற தொற்று நாசினியெனினும் நோய் நிலவும் வேளைகளில் நோயாளிகளின் துணிகளையும் கழி கூடங்கள், தரைகளையும் நோய்த் தொற்றறச் செய்யவும் அதைப் பாவிக்கலாம். நோய்த் தொற்று பரவுவதை அது தடுத்துவிடும்.

உலகமெங்குமுள்ள டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்றோல். ஏனெனில் அது சக்தி வாய்ந்த நம்பகமான தொற்று நாசினி என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிவார்கள்.

றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.

P 0126

# ‘அமைச்சர் பதவியைவிட பாஷை முக்கியமானது’

— வி. பி. தென்னகோன்

ஹலாவத்த, செவ்வாய்

‘மக்கள் அரசாங்கத்தில் நானும் ஓர் அமைச்சர்தான். அமைச்சர் என்ற முறையில் தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாப்பது எனது கடமை. என்றாலும் எமது அரசாங்கத்திலுள்ள கூட சிங்கள பாஷைக்கு எதுவித ஆபத்தும் ஏற்படுமானால் அன்றே எனது அமைச்சர் பதவியை ஒரு பக்கம் போட்டுவிட்டு சிங்களத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பொதுமக்களோடு சேர்ந்து கொண்டு விடுவேன். அமைச்சர் பதவியைப் பாதுகாத்துக்கொள்வதைவிட சிங்கள மொழியைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பது மேன்மையாகும். எமது அரசின் சில அமைச்சர்கள் கூட சிங்களத்தை மறந்துவிட்டு பணிபுரிவது கவலைக்குரியது. சிங்களத்துக்கு உரிய இடம் அளிப்பதாயின் எல்லா அமைச்சர்களும் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்’.

மேற்கண்டவாறு பிக்கிரிய கிராம சபை பொது மைதானத்தில் நடைபெற்ற சத்தோறனே சாகித்திய சங்கத்தின் 26வது வருடாந்த விழாவையும் சாகித்திய தினத்தையும் ஒட்டி நடைபெற்ற விழாவில் தலைமை வகித்துப்பேசிய அகில இலங்கை கவிஞர் சம்மேளனத்தின் தலைவரும் சமூக சேவைகள் அமைச்சருமான திரு. வி பி தென்னக்கோன் கூறினார்.

ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து கொள்ளும்விதத்தில் பேசுவதற்குத் தான் மொழி தேவைப்படுகின்றது. எமது அமைச்சர் சபையில் பெரும்பான்மையானவர்கள் சிங்களவராய் இருந்த போதிலும் அவர்களில் சிலருக்கு சிலசமயங்களில் சிங்களம் மறந்துபோய் விடுவது கவலைக்குரியது. சிங்களத்தைக் காப்பாற்ற பணியாற்ற வேண்டியவர்கள் அமைச்சர்கள்தான். எமது அரசில் தவறுகள் பல இருக்கலாம். அவைகளை மக்களிடம் கூறி பகிர்ந்து கொள்ள வேண்டும். தவறுகளை ஒளித்துக்கொண்டு மந்திரிசபையின் சொகுசுகளை அனுபவிப்பதைவிட எந்த சமயத்திலும் உண்மையைக் கூறிவிட்டு வீட்டுக்குச்செல்ல நான் தயாராய் இருக்கிறேன். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# இராமநாதன் இசைக் கழகப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்.புத.

இராமநாதன் இசைக்கழகத்தின் இறுதிப்பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. சித்தியடைந்த தோர் விபரம்வருமாறு:

### வாய்ப்பாட்டு

சித்தி: கே தேவநாயகம், எஸ் கமலாதேவி, ஆர். மனோன்மணி அம்மாள், பி. மதுரைவாசனி, எஸ் நல்லம்மா, ஜி நவமணி, வி. ராஜேஸ்வரி, எஸ் சிதம்பரேஸ்வரி, என் சிவசக்தி, என் சிற்றம்பலராசனி, என். சுபத்திராதேவி, எம் வரகுராணி எம் யோகரஞ்சிதம்.

### நானசித்தி உபமாடம்

என் அம்பிகை, சி குகதாம்பாள், வி சரோஜினிதேவி, வி கிருபராணி (இரண்டாம்), எம் யோகரஞ்சிதம் (இரண்டாம் பிரிவு).

### வீணை

தி தெய்வநாயகி (சித்தி)

### வயலின்

வி சித்திரா சரோஜினி (முதல்பிரிவு), ஏ பத்மாசனி (முதல் பிரிவு).

### மிருதங்கம்

ஆனந்தபிரசாத், ஆர். பாலசிறி. ஏ ஜெயமணிதேவி, எஸ் இருவானந்தன் (இரண்டாம் பிரிவு). எஸ். லோகேஸ்வரன், என் மகேந்திரன் (முதல் பிரிவு), கே பரமேஸ்வரன். எஸ் பிரணவநாதன் (இரண்டாம்), ஏ ரகுநாதன், கே சேயுந்தன், பி. சின்னராஜா.

இன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் விழாவெடுக்கின்றனர். இன்று மாலை யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தலைமையில் இவ் விழாவில் "கந்தப்புச் சட்டம்பி" "காப்பிடாமி" ஆகிய இரு நாடகங்களும் இசைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## மூர்த்திகள் மீண்டும் உள்ளே

மாவிட்டபுரம், செவ்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கிழக்குவாசலில் வைக்கப்பட்டிருந்த மூர்த்திகள் உள்கொண்டு செல்லப்பட்டதையடுத்து திருவாதிரை விழா மிக அமைதியான முறையில் நடைபெற்றது.

மாவைக்கந்தன் ஆலயத்தில் சில மாதங்களாக ஆலய கிழக்கு வாசலில் உள்ள இரும்புக் கிறிக்கு பொற்பதாரத்தில் தற்காலிக மண்டபம் அமைத்து அதில் மூர்த்திகளை எழுந்தருளச் செய்து பூசைகளும் விசேஷ தினங்களும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன.

திருவாதிரையன்று இவ் ஆலயத்தில் இருந்த மூர்த்திகள் உள் எடுத்துச் செல்லப்பட்டு திருவாதிரை உற்சவம் மிக அமைதியாக நடைபெற்றது. இனி உள்வீதியில் திருப்பணி வேலைகள் நடைபெறவிருக்கின்றதாம்.

## பதவி

1ம் பக்கத் தொடர்ச்சி

க்குக் முன்னர் தொலைபேசித் தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த நான்கு முதல்தர இன்ஸ்பெக்டர்கள் பதில் என்ஜினியர்களாக நியமிக்கப்பட்டபோது தமிழர் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## இடமாற்றம்

சங்கானை, செவ்வாய்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி கந்தோரில் கடமையாற்றிய திரு கதிரேச சண்முகம் இம்மாதம்தொடக்கம் மன்னார் கச்சேரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

# அமெரிக்க அணு ஆயுதக் கப்பல் இன்னும் இந்துசமுத்திரத்தில்

நியுயோர்க், ஜன. 4

அமெரிக்காவின் அணு ஆயுத விமானம் தாங்கிக் கப்பலான என்டர்பிரைஸ் உட்பட ஏழாவது கடற்படை அணி இன்னமும் இந்த சமுத்திரத்திலேயே உலாவிக் கொண்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய பாகிஸ்தான் போரின்போது இந்தக்கடற்படை அணி வங்காளவிரிகுடாவுக்கு வந்தது. என்டர்பிரைஸ் உட்பட பல போர்க் கப்பல்களும் நாசகாரிகளும் இந்த அணியில் இருக்கின்றன. தரையிலும் நீரிலும் செய்யக்கூடிய கப்பல்களும் இதில் இருக்கின்றன.

இந்த சமுத்திரத்தில் மாலைதீவுக்கும் இலங்கைக்கு மிடையில் இக்கப்பல்கள் உலாவிக் கொண்டிருப்பதாக அதிகாரிகள் கூறினார்கள்.

அதிபர் நிக்ஸன் சீனாவுக்கு செல்லவிருப்பதால் அவர் அங்கு செல்லும் சமயத்தில் சீனக்கடல் பிராந்தியத்துக்கு இந்த அணி புறப்படக்கூடும் என்றும் அதுவரை இந்துசமுத்திரத்திலேயே தங்கியிருக்கக்கூடும் என்றும் அவதானிகள் கருதுகிறார்கள்.

பாரத - பாகிஸ்தான் போரின்போது இந்த கடற்படை இந்துசமுத்திரத்துக்கு அனுப்பப்பட்டது அமெரிக்காவின் வலுவைக்காட்டுவதற்கன்றி சண்டையில் எதுவிதத்திலும் நேரடியாகக் கலந்து கொள்வதற்கல்லவென்று சிலர் கருதுகிறார்கள்.

# இன்று சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம் புதன்

காஞ்சிபுரம் ஸ்ரீ மெய்கண்டார் சந்நிதானம் ஞானபீடம் தொண்டை மண்டல ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இன்றும் நாளையும் மாலை 6 மணி முதல் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் "திருவருட்பயன்" என்னும் சித்தாந்த சாத்திரப் பொருள் விளக்கஞ்செய்வார்.

0 0 0

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 10வது ஆண்டு நிறைவையொட்டி நாடெங்கும் கொண்டாடப்படும் காப்புறுதி வாரத்தின் அங்கமாக கூட்டுத்தாபன யாழ்ப்பாணக் கிளையினர்

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் (5-1-72)

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 வாசுதந்திரத்தனை, சோமசுந்தரம். 6-35 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 பண்ணைச் செய்திகள் 7-05 துதிப்பாடல் 7-30 குரல்வளை. 8-00 இசை வேளை, எஸ். சோமசுந்தரம், 8-15 இஸ்லாமிய கீதம்.

இரவு 6-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி-திருமதி மெடோஸ் 6-30 பாட்டு - தனலஷ்மி மகேந்திரராஜா, 7-00 கண்ணொளி காவியம், 7-15 திருக்குறள் அமுதம் புலவர் மாணிக்கடியனார். 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள்- சுமுத்திரா ரத்தினம் பாத்த பாடல்களை வி ஏ அடுமை நாதன் பாடுகிறார், 7-45 நாடகம்- மூவர் படும் பாடு- எழுதியவர்: ஜெய வெளரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி என். கே. பத்மநாதன்

# கூவம் ஆற்று முதலை பிடிபட்டது

சென்னை ஜன 3

சென்னை கூவம் ஆற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த முதலையை இன்று மிருகக் காட்சி சாலையினர் பிடித்துக் கொண்டனர் 6 அடி 3 அங்குல நீளமுள்ள இந்த முதலையின் ஒரு அடி நீளமுள்ள

# வீடு தீக்கிரை குடும்பம் நிர்க்கதி

மாவிட்டபுரம், செவ்வாய்

வீடு தீக்கிரையானதால் நிர்க்கதிக்குள்ளான ஒரு குடும்பம் கோவில் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளது. அங்கு விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் தெய்வாதீனமாக உயிர் தப்பின. ஏழாலைக் கிராமத்தில் இச்சம்பவம் நடந்தது.

பிரஸ்தாப வீட்டுக்காரர் தமது சின்னப் பிள்ளைகளை வீட்டிலே விட்டுவிட்டுத் தோட்டத்துக்குச் சென்ற சமயம் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்கும் காரியாதிகாரி திரு. பி எல். பற்றிக்ஸ் ஸ்தலத்திற்குச் சென்று சம்பவங்களை நேரில் பார்வையிட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து நிர்க்கதி அடைந்துள்ள குடும்பத்துக்கு உதவும்வகையில் நிதி சேகரிக்கும் வேலையில் ஏழாலை கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு இ. பாலசுப்பிரமணியம் தலைமையில் ஒரு குழு ஈடுபட்டுள்ளது.

# தற்கொலை

சொமுப்பு செவ்வாய்

யாழ்ப்பாணத்திலும் நெடுந்தீவிலும் சிலகாலம் கடமையாற்றிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஷாரிக் முஸாபர் இயந்திரத் துப்பாக்கியினால் தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

காகபகுதி இன்று மின்சார ரயிலுக்குள் அகப்பட்டு துண்டிக்கப்பட்ட நிலையில் பிடிபட்டது.




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

-5 JAN 1972
UNDERGRADUATE LIBRARY



## மணிவாக்கு

யார் அன்புடனே யார் தன் பெற்றோர்களுக்கு சேவை செய்கிறரோ, அவருக்குத் தெய்வ அருள் கிட்டும். ஏனெனில் அவ்வித சேவையால் கடவுள் மிகவும் மகிழ்கிறர். வீட்டிலே இருதெய்வங்கள் உண்டு. பெற்றதாயும் தந்தையுமே அவர்கள். — சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

சாதாரண விரோதகிருது வருஷம் மார்கழி மாதம் 21-ந் திகதி (5-1-72)


## ஷேக் முஜிபுரின் விடுதலை

வங்க தேசத் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்ய பாகிஸ்தான் அதிபர் பூட்டோ செய்துள்ள தீர்மானம் பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கதாகும். ராவல்பிண்டியிலிருந்து அவரை டாக்காவுக்கு அழைத்துவர ஒரு சென்ற சிலுவை ஸ்விஸ் விமானம் ராவல்பிண்டிக்குப்புறப்பட்டுச் சென்றுள்ளதாக ஒருசெய்தி தெரிவிக்கின்றது. வீண் தவக்கம்செய்யாமல் தலைவர் முஜிபுரை டாக்காவுக்கு அனுப்பி வைக்க பாகிஸ்தான் அதிபர் முன்வந்தது பாராட்டத்தக்கதுடன், எதிர்காலத்தில் இவ்விரு தலைவர்களுக்கும் மட்டுமன்றி இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நல்லுறவுகள் ஏற்படவும் இது வழிசெய்வதாக இருக்கும்.

அதிபர் பூட்டோ பதவி ஏற்றதும்முதல்வேலையாக ஷேக் முஜிபுரை சிறையிலிருந்து விடுதலைசெய்து வீட்டுக்காவலில் வைத்தார். பின்னர் ராவல்பிண்டிக்கு அழைத்துவந்து ஜனாதிபதியின் மாளிகையைச் சேர்ந்த ஒரு கட்டிடத்திலேயே வைத்திருந்து அவரைக்கண்டு பேசியுள்ளார். இருவருக்கும் என்ன பேச்சு நடந்ததென்ற விபரம் தெரியவில்லை. சென்ற ஒன்பது மாதங்களாக நடைபெற்றுள்ளவை அவருக்குத் தெரியாது. தமது சகாக்களை அவர் சந்திக்காத நிலையில், அவர் திட்டமாக எதுவும் கூறியிருக்கமுடியாது. முதலில் அவர் தம் சகாக்களைக் கண்டு பேசவேண்டுமென்பதை உணர்ந்த அதிபர் பூட்டோவும் எவ்வித நிபந்தனையும் அவருக்கு விதிக்காததில் வியப்பில்லை. நட்பும் நல்லுறவும் மூலம்தான் இனி ஏதும் நன்மை ஏற்படலாமென்பதை பூட்டோ உணர்ந்திருக்கவேண்டும்.

சென்ற பதினான்கு நாள் யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள தீங்குகள் சாதாரணமானதன்று. இராணுவம் தோல்வியடைந்ததுடன், கிழக்குப்பகுதி பிரிந்து தனிநாடாகப் பிரகடனம் செய்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதாரம் அடியோடு சீர்குலைந்துள்ளது. இந்த அவல நிலையிலிருந்து நாட்டைமீட்க பாகிஸ்தான்மக்கள் இன்று நம்பி இருப்பது அதிபர் பூட்டோ ஒருவரைத்தான். சென்றகால அனுபவங்கள் அவருக்குப்பலபாடங்களைப் புகட்டியிருக்கும். தேர்தல் முடிந்ததும் கிழக்குப் பகுதிமக்களின் பிரதிநிதியான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆறு நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டிருந்தால், பாகிஸ்தானுக்கு இன்றையகதி ஏற்பட்டிராது அதே ஆறு நிபந்தனைகளை இன்று அதிபர் பூட்டோ ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பினும் ஷேக் முஜிபுரும் அவரைத் தலைவராகக் கொண்டவர்களும், உடன்படுவது மிகவும் கஷ்டம்.

கராச்சி பொதுக்கூட்டத்தில் அதிபர் பூட்டோ பேசுகையில், உலக மக்களின் கருத்தை மதித்தே தாம் ஷேக் முஜிபுரை இப்போது விடுதலைசெய்ததாகவும். அவசியமாயின் டில்லிக்கும் தாம் செல்லத் தயார் என்றும் கூறியதாக ஒரு செய்திதெரிவிக்கின்றது. "ஷேக்கை நிபந்தனையின்றி விடுவித்தால் பாரத-பாக் உறவுகள் வெகுதூரம் பலப்படும்" என்று இந்திய வெளிநாட்டு அமைச்சர் டில்லி பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கின்றர். ஷேக் விடுதலையானதால், இனி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ளபல பிரச்னைகளும் ஷேக்கின் உதவியால் வெகுவாகத்தீரலாமென்ற புதிய நம்பிக்கை பிறந்துள்ளது. புதிதாக விடுதலை அடைந்த நாடுகளான இந்தியாவும்பாகிஸ்தானும் மற்ற ஆசிய ஆபிரிக்க நாடுகளும் பொது எதிரியான ஏழ்மையை எதிர்த்துப் போராடுவதில் ஒத்துழைக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. பழிக்குப்பழி, மீண்டும் யுத்தம் என்ற யோசனைகளை விட்டு, மேலான அரசியல் ஞானத்துடன் காரியங்கள் செய்தத் தலைவர்கள் முற்பட்டால்தான் அரசியல்விடுதலை கிடைத்ததின் பலன் பொதுமக்களுக்குக் கிடைக்கமுடியும். அனுபவங்கள்தான் பல முக்கிய பாடங்களை நமக்குக் கற்பிக்கின்றன. பழைய தவறுகளைத்திருத்திக்கொள்ளவும், புதிய நல்லுறவுகளை வளர்த்து உபகண்டத்தில் மக்கள் முன்னேறவும் வங்கத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் விடுதலை பெரிதும் உதவிசெய்யும்.

# இன்று ஸ்ரீதியாகப்பிரம்ம ஆராதனை

## ஐயாறன் எழுதுவது

சென்னையிலே இசைவிழா இம்முறை சிறப்பாக முடிந்தது. லட்சக்கணக்கானவர்களுக்கு இன்பம் ஈழத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்களும் தங்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே இதைக் கேட்டு இன்புறவே முடிந்துள்ளது. நல்லவேளையாக இந்திய வானெலியைக் கேட்கக்கூடிய உரிமை நமக்கு இருக்கிறது. காசு பணம் செலவில்லாமல் இருந்த இடத்திலிருந்தே இவ்வளவு செவிச் செல்வத்தைப் பெற முடிவது நாம் செய்த பாக்கியமேயல்லவா? இந்திய வானெலிக்கு இங்குள்ள இசைக்கலை அன்பர்களின் நன்றி பெரிதும் உரித்தாகும்.

இன்றுமுதல் திருவையாற்றிலே ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனை விழா மூன்று நாட்களுக்கு நடைபெறுகின்றது.

ஒவ்வொரு நாளும் காலை 8-30 முதல் 11 மணி வரையும், மாலை 4 முதல் இரவு 11 மணி வரையும் இந்திய வானெலி மூலம் இந்த இசைவிருந்தைப்படைக்கும்.

ஏற்கெனவே வானெலியில் பாடும் வித்வான்கள்தான், அஞ்சல்நேரத்தில் விழாவில் பாடமுடியுமென்றும், மற்றவர்கள் எல்லோருக்கும் அஞ்சலில் இல்லாவிட்டாலும், அங்குவந்து பாடி தங்கள் சங்கீத காணிக்கையை ஸ்ரீ தியாகராஜருக்குச் செலுத்தவாய்ப்பிருக்குமென்றும் விழா அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறர். இளம் வித்வான்கள் ஒவ்வொருவரும் மேடை ஏறி அந்த சந்நிதிக்கு முன் ஒவ்வொரு கீர்த்தனையை மட்டும் பக்தியுடன் பாடிவிட்டுச் செல்லும் காட்சி, தமிழ் இளைஞர்களின் உயரிய பண்பைக் காட்டுவதாகும். பெரிய வித்வான்களும்கூட இரண்டல்லது மூன்று பாட்டுகள் தான் பாடலாம். இராக ஆலாபனை செய்ய முடியாது. தங்கள் செலவில் வந்து பாடுவதுடன் மட்டுமல்லாமல், ஆராதனையில் சமாராதனை எனும் அன்னதானத்துக்கும் வித்வான்கள் பணம் உதவிவிட்டுச் செல்லுவர். கலையை விலைபாக்குவது தமிழர் பண்பாடல்ல. ஏழைபணக்காரர் எல்லாரும் வந்து கலையை ரஸிப்பதுடன் உணவுக்கும் கவலையில்லை. எல்லாம் இலவசம்! சாப்பாட்டுக்குச் சற்றே கட்டுப்பாடு இருப்பினும், இக்காலத்திலும் இவ்விதம் அங்கு நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களின் பழைய பண்புதான் என்னே!

0 0 0

நேற்று ஓர் அன்பர் வந்து கொழும்புத்துறை முனிவரான யோகசுவாமிகளின் நூற்றண்டு ஜயந்தி வருகிறதென்றும் அதைச் சிறப்பாகப் பயன்படும் முறையில் கொண்டாடவேண்டுமென்றும் நினைவுபடுத்தினர்.

இது மிக முக்கிய விஷயம். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை நாடெங்கும் இந்தியாவிலும் கூட நடைபெறவேண்டிய விழா. சுவாமிகள் 1872-ம் வருடம் மே மாதம் அவதரித்தவர். வருகிற மேயுடன் சரியாக நூற்றண்டாகிறது பிறந்த நாளிலிருந்து ஒரு வருஷத்துக்கு இவ்விழாவினை திட்டம்போட்டு நடத்த இங்குள்ள அன்பர்கள் முன்வர வேண்டும். அவரது தற்சிந்தனை பாடல்கள் போட்டி நடத்தி பரிசுகள் வழங்க வேண்டும். சுவாமிகளைப் பற்றிய போட்டியும் நடத்த வேண்டும்.

இரு நாட்களுக்கு முன் ஒரு சிவதொண்டன் நிலையத்துக்குச் சென்றிருந்தேன் அங்குள்ள அமைதியையும் ஒழுங்கையும் பார்க்கும்போது, சுவாமிகளின் திருவருள் சக்தி அங்கு நிறைந்திருப்பதை உணர்ந்தேன். கிழக்கு மாகாணத்தில் செங்கலடியிலே சேர்க்கிரிபிரபுவின் மகளுர் செய்யும் அரிய பணிகளையும் அவரது எளிமையையும் காண நம்ப முடியாது! எல்லாம் சுவாமிகளின் அருள் அன்றே! அன்னதானம் செய்யவேண்டிய அவசியத்தை சுவாமிகள் அறிவுறுத்தி அதற்காக நெல் உற்பத்தியையும் பெருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினர்கள், அவரது உபதேசங்களைப் பரப்பி, அதன்படி நடப்போமாக!

# இந்திய வம்சாவழியினருக்கு ஆட்சிமன்றத்தில்பிரதிநிதித்துவம்

## புதிய அரசியல் திட்டத்தில் ஏற்பாடு

— நமது நிருபர் கே. ஜி. நவரத்ன —

கொழும்பு,செவ்வாய் இலங்கை பிரஜாஉரிமை பெறும் இந்திய வம்சாவழியினருக்கு ஆட்சிமன்றத்தில் இரட்டை பிரதிநிதித்துவம் அல்லது அதற்கு மேற்பட்ட பிரதிநிதித்துவம் வழங்குவதற்கான அம்சம் ஒன்று புதிய அரசியல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட விருக்கிறது.

மதம், இனம் அல்லது வேறு அம்சத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு மாறுபட்டவர்களான ஒரு குறிப்பிட்ட மக்கள் எங்காவது ஓர் இடத்தில் கணிசமான எண்ணிக்கையில் வாழ்வார்களானுல் அவர்களின் நலன்களைப் பேணும்வகையில் ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு தொகுதி நிர்ணய ஆணைக்குழு வசதிகள் செய்து கொடுக்கலாம் என புதிய அரசியல் திட்டத்தில் ஒரு பிரிவு குறிப்பிடுகின்றது. இந்த ஆண்டில் புதிய தொகுதிகள் நிர்ணயிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படிக்கு மலைநாட்டில் இந்திய வம்சாவழியினர் பெருமளவில் வாழும் பகுதிகளில் இவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடியதாக இரட்டைத் தொகுதிகள் அல்லது அதற்குமேற்பட்ட தொகுதிகள் பல விடங்களில் ஏற்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கலாம்

இலங்கை வம்சாவழிப் பிரஜைகளாக சுண்டிய சிங்களவர்களுக்கும் பதிவு செய்யப்பட்ட இந்திய வம்சாவழிப்பிரஜைகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் விதத்தில் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்படும் என்று அவதானிகள் எதிர்பார்க்கிறர்கள்.

### சுதந்திரத்துக்கு முன்னர்

இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர் 1947ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அப்பொழுது பிரிட்டிஷ் பிரஜைகளாகவிருந்த இந்திய வம்சாவழியினர் தங்களுக்கென 7 பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனர். இது பெரும்பான்மை மக்களுக்கு பீதியை ஏற்படுத்துவதாய் இருந்தது. இதனுல் இலங்கைப் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யோசனை தெரிவித்தார். இது ஒப்பந்தத்தின் மூலப்பிரதியை தெரிவிக்கப் படாத யோசனை என்பதால் இலங்கையிலுள்ள தமிழ் தலைவர்களும் மற்றவர்களும் எதிர்த்தார்கள், இந்திய அரசும் இதனை விரும்பவில்லை.

1965ம் ஆண்டு தேர்தலில் தோல்வியுறும் வரையில் இந்தக் கருத்தை அவர்வலியுறுத்திவந்தார். இந்திய வம்சாவழி வாக்காளர்களின் பாதிப்பிலிருந்து உள்ளூர் வாக்காளர்களைக்காப்பாற்ற இது அவசியம் என்று அவர் கூறிவந்தார்.

இந்தியர்களும்-சிங்களவர்களின் எதிர்காலமும் என்ற தலைப்பில் அவர் பதவியில் இல்லாதிருந்த காலத்தில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட கைநூலில், இலங்கையிலுள்ள இதர சிறுபான்மையரோடு இணைந்து இந்திய வம்சாவழியின் 145 தேர்தல் தொகுதிகளின் முடிவுகளை இவர்கள் பாதிக்கக்கூடும் என்று அவர் வலியுறுத்தினர்.

வடக்கு கிழக்கிலுள்ள பாரம்பரிய தமிழ் தொகுதிகள்.தென்மேற்கில் கத்தோலிக்கர்கள் வாழும் தொகுதிகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டால் ஆட்சிமன்றத்தில் சிங்கள எம். பிக்கள் சிறுபான்மையாகி விடுவர் என்று அச்சம் தெரிவிக்கப் பட்டது.

### இப்போதய நிலைமை

ஆனல் இப்பொழுது இந்திய வம்சாவழியினருக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் இரட்டைத் தொகுதிகள் அல்லது பல அங்கத்தினர் தொகுதிகளை ஏற்படுத்த அவர் விரும்புவதாகத் தெரிகின்றது. இதனை பெரும் பான்மை சமூகத்தவர்களும் வரவேற்பதாக அறியப்படுகின்றது.

75, ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு அங்கத்தவர்

(1-ம்கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி) என்றும் கடுதலாக 1000 சதுர மைலுக்கு மேற் கொண்டு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும் இப்பொழுது திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இந்திய வம்சாவழியினர் சுமார் 12 இரட்டை அல்லது மூன்று உறுப்பினர் தொகுதிகள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியும் என்று தெரிகின்றது. எனினும் இவர்கள் 1978ம் ஆண்டு வரையும் தமது வாக்குகளைப்பிரயோகிப்பதற்கு காத்திருக்க வேண்டும். புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததின் பின்னர் இப்போதைய ஆட்சிமன்றம் மேலும் 6 ஆண்டுகளுக்கு பதவியிலிருப்பதற்கு வழிவகுக்கப் பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரஜைகளை நியமனம் செய்யும் இப்போதைய முறையைவிட புதிய ஏற்பாடு இந்திய வம்சாவழியினருக்கு சிறப்பாக இருக்கும் என்று அவதானிகள் கருதுகிறர்கள். (பி டி ஐ)


### விற்பனைக்கு

மானிப்பாய் தபாற்கந்தோருக்கருகாமையில் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்ட இரட்டை வீடுகளைக் கொண்ட 18 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். கடன் வசதியுண்டு. இன்றும் நாளையும் நேரில் சந்திக்கலாம். பின்வருமிடங்களுக்கு விண்ணப்பிக்கவும். நடராசா பொன்னுச்சாமி, மானிப்பாய். அல்லது தபால் தொடர்புகொள்ளவும். 81B, அலெக்சாண்டர் பிளேஸ், கொழும்பு-7 3850


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேற்குவீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.